**ஊர்காவற்றுறை பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊர்காவற்றுறை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.1 ஆம் பந்தியிலுள்ள (அ) அவதானிப்பு நீங்கலாக கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி திணைக்களம் வடக்கு மாகாணத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட ரூபா 519,874 பொறிகள் மற்றும் இயந்திரம் என்பன நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படாமையினால் நிலையான சொத்து மற்றும் மூலதன அரசிறை உதவு தொகை என்பன குறித்த பெறுமதியால் குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி திணைக்களம் வடக்கு மாகாணத்தினால் பொறிகள் மற்றும் இயந்திரம் என்பன அன்பளிப்புச் செய்யப்பட்டபோது வழங்கப்பட்ட வழங்கல் கட்டளையில் பொருட்களின் பெறுமதி குறிக்கப்படவில்லை. | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக நடவடிக்கைகள் நிறைவுபெற்றமையை உறுதிப்படுத்தி பதிவுகள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன், குறித்த தவறுகள் சீர்செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் உள்@ர் கடன் அபிவிருத்தி நிதியத்திற்காக 2022 ஆம் ஆண்டு செலுத்த வேண்டிய கடன் தொகை ரூபா 977,811 நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்பாக வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்தும் கடன் மூலதனத்திற்குள் உள்வாங்கப் பட்டிருப்பதனால் நிதிக் கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்பானது குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | கடனானது சபையின் தலைமை அலுவலகக் கட்டடம் அமைப்பதற்காக 2012 ஆண்டு 10 வருட நீண்டகாலக்கடனாகப் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் குறித்த கட்டடத்தினை இறுதிக்கணக்குகளில் காணி கட்டங்களிற்குள் நிலையான சொத்தாக உள்வாங்கப்பட்டுள்ளது. எனவே கடன் மூலதனமாக நீண்டகாலப் பொறுப்பாக கணக்குகளில் உள்வாங்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக உரிய காலப்பகுதியில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதனூடாக குறித்த பெறுமதிகளினை நடைமுறைப்பொறுப்பாக வெளிப்படுத்த எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் இறுதியில் சபையின் களஞ்சியத்தில் ரூபா 42,877 மின் உபகரணங்கள் இருப்பாக காணப்பட்டிருந்த போதும் அப்பெறுமதி களஞசிய இருப்பாக உள்வாங்கப்படாமையினால் நிதிக்கூற்றில் நடைமுறைச்சொத்துக்கள் மற்றம் வருமான மிகை என்பன குறைத்தும் வெளிப்படுத்தப் பட்டிருந்தது. | 2021 இல் இருப்பாக காணப்பட்ட மின் உபகரணங்கள் 2021 இல் நிதிக்கூற்றில் உள்வாங்கப்படவில்லை. இனி வருங்காலங்களில் மின் உபகரணங்கள் நிதிக்கூற்றில் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக நடவடிக்கைகள் நிறைவுபெற்றமையை உறுதிப்படுத்தி பதிவுகள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன், குறித்த தவறுகள் சீர்செய்யப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 5,073,029 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 10,236,599 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

---------------------------------

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

-------------------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி** | | |
| | 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 134 (i) இற்கமைவாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது ஆதன வரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 134(1) இற்கமைவாக ஆதன மதிப்பீட்டின் இறுதி நடவடிக்கைகள் விலைமதிப்பீட்டுத் திணைக் களத்தினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் அது நிறைவுற்றதும் எமது சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டடங்கள் என்பவற்றின் மீது ஆதன வரி அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வருமான சேகரிப்பு முகாமைத்துவத்தினை வினைத்திறனாக்குவதுடன் நிலுவைகளை விரைவாக அறவிடுவதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | **வாடகை** | | |
| | சபையினால் நீண்டகால அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்படும் 11 எண்ணிக்கையான கடைகள் குத்தகைக்கு வழங்கப்படாமையினால் மீளாய்வாண்டில் ரூபா 139,200 சபைக்கு வருமான இழப்பாக இருந்தது | பத்திரிகை மற்றும் உள்;ர் விளம்பரங்கள் மூலம் கேள்வி கோரப்பட்டு வாடகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும், மேற்குறிப்பிட்ட கடைகளை வாடகைக்கு வழங்கமுடியவில்லை 2022 இல் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது | குறித்த நிலுவை தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை விரைவுபடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி என்பன தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் வருடாந்தம் கேள்விகோரி வழங்கப்படும் 05 சந்தைகள் 11 கடைகளானது கடந்த 02 வருடங்களாக கேள்விகோரி வழங்கப்பட்டிருக்காமையினால் ரூபா 870,100 சபைக்கு வருமான இழப்பாக இருந்தது. | சபையினால் மேற்படி சந்தைகள் கடைகள் கேள்விகோரி விளம்பரப்படுத்தப்பட்ட போதும் எவராலும் கோரப்பட்டிருக்கவில்லை. | சபையின் சொத்துக்களைப் பயன்படுத்தி வருமானங்கள் சேகரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நிலையான வைப்பில் உள்ள நிதி ரூபா 26,891,013 இனை பயன்படுத்தி அபிவிருத்தித் திட்ட வேலைகளினை நடைமுறைப்படுத்தாது வங்கியில் வட்டி வருமானம் உழைக்கும் நோக்குடன் வைப்பிலிடப்பட்டிருந்தது. | ரூபா 4,700,000 இற்கு அபிவீருதிதி டீவலைககள் நடைபெற்றுவருகிற, மயானங்கள் புனரமைப்பிற்காக ரூபா 408,038 ம் மற்றும் 2019ம் ஆண்டின் அபிவிருத்தி ஒதுக்கத்தில் கண்ணகை அம்மன் இறங்குதுறை இளைப்பாறு மடத்திற்கு நெற் அடித்தல் லேைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. | சபை நிதிகளினை விரையமின்றி உத்தமமட்டத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| **பொறுப்பேற்கப்படாத சொத்துக்கள்** | | |
| சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 14 வாகனங்கள், 10 காணிகள் மற்றும் 09 மயானங்கள் நாளதுவரை சபையின் பெயருக்கு உரிமை மாற்றப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் ரூபா 10,322,600 பெறுமதியான 12 மோட்டார் வாகனங்கள் சபையின் பெயரிற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. தற்போது 04 காணிகளின் விலை மதிப்பீடு கிடைக்கப்பெற்றுள்ளது. அவற்றினை எதிர்வரும் காலங்களில் கணக்குகளில் சேர்த்துக்கொள்ளப்படும். மிகுதி தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ள்ப்பட்டுள்ளது. | சபையின் பயன்பாட்டிலுள்ள சொத்துக்களினை சபைக்கு உடமையாக்கு நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படல் வேண்டும். |

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| **ஊழியர்பிணை**<br><br>2020 மார்ச் 07 ஆம் திகதிய PF/01/2017 (அ) ஆம் இலக்க மாகாண நிதிச்சுற்று நிருபத்திற்கு அமைவாக சபையினால் மீளாய்வாண்டு இறுதிவரை 02 வருமான மேற்பார்வை உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 30,000 (15000x2) பெறுமதியான ஊழியர் பிணைப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த அலுவலர்களில் 02 பேர் பதவி வெறிதாக்கல் செய்யப்பட்டோர் ஆவார். அவர்களின் மீதிகளினை அறவிடுவதற்கு NP/09/A&P/04/12/CIR/2020 ஆம் இலக்க மாகாண நிதிச் சுற்று நிருபத்திற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஏனைய இருவரும் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளமையினால் அவர்களின் மீதிகளினை பணிக் கொடையிலிருந்து அறவீட்டினை மேற்கொள்வதற்கு ஏதுவாக ஓய்வூதிய பணிப்பாளருக்கு PD3 படிவம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | பிணைத் தொகையினை மீளளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |